**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், ஆத்தூர்**

**முன்னிலை: திரு.S. அன்புதாசன், பி.காம்., பி.எல்.,**
**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர், ஆத்தூர்**

**2025 ம் ஆண்டு அக்டோபர் திங்கள் 24 ஆம் நாள் வெள்ளிக்கிழமை**

**I.A. 2/2025 in O.S. No.61/2019**

திரு. P. இஞ்ஞாசி அந்தோணிராஜ்
..... மனுதார்/வாதி

/ எதிர்/

1. திரு. U.நாகராஜ்
2. திருமதி. N.முருகலட்சுமி ..... எதிர்மனுதாரர்கள் /பிரதிவாதிகள்

இம்மனுவானது இந்நீதிமன்றத்தில் 13.10.2025 அன்று கோப்பிற்கு எடுக்கப்பட்டும் இதுநாள்வரை இந்நீதிமன்றத்தில் விசாரணையில் இருந்து வந்தும் இறுதியாக இன்று இந்நீதிமன்ற விசாரணைக்கு வந்தபோது மனுதார்/வாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. A.முருகேசன் அவர்கள் முன்னிலையாகியும், எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. B.வாசுதேவன் அவர்கள் முன்னிலையாகியும், இம்மனு குறிப்பிட்ட நிபந்தனைகளின் அடிப்படையில் அனுமதிக்கப்படுகிறது என மேற்குறிப்பு செய்யப்பட்டும், இருதரப்பு வாதம் கேட்கப்பட்டும் வழக்கு ஆவணங்களைப் பரிசீலித்தும் இந்நீதிமன்றம் வழங்கும்.

<u>உத்தரவு</u>

மனுதாரர்/வாதி தரப்பில் தாக்கல் செய்துள்ள பதிலுரையை ஏற்றுக்கொள்ள வேண்டி சிபிசி ஆர்டர் 8 ரூல் 9 மற்றும் பிரிவு 151 ன்படி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2) மனுவுரை சுருக்கம்**

1. இம்மனுதாரர் அசல் வழக்கில் வாதி ஆவார், எதிர்மனுதாரர்களுக்கு எதிராக நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. அசல் வழக்கில் ஆதியில் ஒரு வழக்கறிஞர் வைத்து ஆஜராகி எதிர்வழக்குரை தாக்கல் செய்துள்ள எதிர்மனுதார்கள், இரண்டாவதாக ஒரு வழக்கறிஞர் மூலம் முன்னுக்கு பின் முரணான சங்கதிகளை சொல்லி கூடுதல் எதிர்வழக்குரை மற்றும் கவுண்டர் கிளைம் பரிகாரம் கோரி தாக்கல் செய்த I.A.No 146/2019 மனு அனுமதிக்கப்பட்டதன் பேரில், மனுதாரர் மாண்பமை மதுரை உயர்நீதிமன்ற C.R.P.No 1513/2021 ல் சீராய்வு மனு கடந்த 18.06.2025 ல் பிறப்பிக்கப்பட்ட உத்தரவில் எதிர்மனுதார்கள் கோரியிருந்த கவுண்டர் கிளைம் பரிகாரம் நிராகரிக்கப்பட்டு, கூடுதல் எதிர்வழக்குரை மட்டும் ஏற்றுக் கொள்ள உத்திரவாகியுள்ளது. இந்நிலையில், எதிர்மனுதார்கள் தாக்கல் செய்துள்ள கூடுதல் எதிர்வழக்குரையில் சொல்லியுள்ள சங்கதிகளும் அசல் வழக்கை திசை திருப்பும் விதமாக உள்ளது.

3. எனவே, இம்மனுவுடன் தாக்கல் செய்துள்ள பதில்உரையை ஏற்றுக்கொள்ள வேண்டி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3). எதிர்மனுதாரர்கள் தரப்பில், இம்மனு குறிப்பிட்ட நிபந்தனைகளின் அடிப்படையில் அனுமதிக்கப்படுகிறது என மேற்குறிப்பு செய்யப்பட்டுள்ளது.

4). இனி தீர்மானிக்க வேண்டியது யாதெனில், இம்மனு அனுமதிக்கத்தக்கதா? இல்லையா? என்பதேயாகும்.

5). **<u>தீர்வு</u>**

இருதரப்பு வாதம் கேட்கப்பட்டது. வழக்குக் கோப்பினைப் பரிசீலனை செய்ததில், அசல் வழக்கானது எதிர்மனுதாரர்கள்/ பிரதிவாதிகளுக்கு எதிராக நிரந்தரஉறுத்துக்கட்டளைப் பரிகாரம் கோரி இம்மனுதாரர்/ வாதியால் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. எதிர்மனுதாரர்கள் எதிர்வழக்குரை மற்றும் எதிர்வழக்குரை தாக்கல் செய்தததாலும், இம்மனுவில் மனுதாரர் தரப்பில் எதிர்வழக்குரைக்கு, பதிலுரையை தாக்கல் செய்துள்ளதால், மனுதாருக்கு அவரது தரப்பு வழக்கை எடுத்துரைக்க போதுமான வாய்ப்பு வழங்க வேண்டும். எனவே, இம்மனுவை அனுமதிப்பதுதான் நீதியின் நலன் கருதி சரியானது என்று இம்மனுவை அனுமதித்து உத்தரவிடுகிறது.

**முடிவாக**, இம்மனுவை அனுமதித்து உத்தரவிடப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணிணி மூலம் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழைத்திருத்தம் செய்யப்பட்ட பின்னர் 2025ம் ஆண்டு அக்டோபர் மாதம் 24 ஆம் நாள் என்னால் திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

SUBRAMANIYAN ANBUTHASAN
Digitally signed by SUBRAMANIYAN ANBUTHASAN
Date: 2025.10.29 10:47:15 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல்
நடுவர் ஆத்தூர்.